DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 309/2018 |
| Deposition of Witness for | Prosecution PW 1 |
| Name | எஸ்தர் |
| Father / Husband Name | ஸ்டாலின் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 12th December 2023.

---

**(எதிரி ஆஜர்).**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1) முதல் தவணையாக எதிரி என்னிடம் எவ்வளவு தொகை வாங்கினார் என்றால் ரூபாய் 5 லட்சம். 2 வது தவணையாக எதிரி என்னிடம் எவ்வளவு தொகை வாங்கினார் என்றால் ரூபாய் 10 லட்சம். 3 வது தவணையாக எதிரி என்னிடம் எவ்வளவு தொகை வாங்கினார் என்றால் ரூபாய் 7 லட்சம். 4 வது தவணையாக எதிரி என்னிடம் எவ்வளவு தொகை வாங்கினார் என்றால் ரூபாய் 5 லட்சம். 5 வது தவணையாக எதிரி என்னிடம் எவ்வளவு தொகை வாங்கினார் என்றால் ரூபாய் 8 லட்சம்.

2) தொழில் விரிவுபடுத்தவும் கடனை அடைப்பதற்காகவும் எதிரி என்னிடம் கடன் கேட்டதாக சொல்வதில் எதிரி என்ன தொழில் செய்து வந்தார் என்றால் பள்ளிக்கூடம் வைத்து நடத்தி வந்தார். எதிரி பள்ளிக்கூடம் நடத்தி வந்தார்

என்ற விவரத்தை புகாரிலும் பிராமண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன்.

3) எதிரிக்கு பணத்தேவை இருப்பதைப் பற்றி தெரிந்து கொண்டு பணம் கொடுத்தேனா என்றால் ஆமாம். பள்ளிக்கூடம் விரிவுபடுத்துவதற்காகவும் ஒவ்வொரு கட்டிடம் எழுப்பும் போதும் பணத்தேவைக்காக கடன் வாங்கினார். எதிரி எனது உறவினாரா என்றால் தெரிந்த நபர்.

4) நான் எதிரிக்கு கொடுத்த தொகை எனக்கு சிறிய தொகையா அல்லது பெரிய தொகையா என்றால் பெரிய தொகை தான். பொதுவாக பெரிய தொகை மற்றவரிடம் கொடுக்கும் போது சாட்சிகளின் முன்னிலையில் தான் கொடுப்பார்கள் அதுபோல் நானும் சாட்சி முன்னிலையில் பணம் கொடுத்தேனா என்றால் ஆமாம் எனது அப்பா முன்னிலையில் தான் பணம் கொடுத்தேன்.

5) எனது அப்பா முன்னிலையில் நான் பணம் கொடுத்த விவரத்தை புகாரிலும் நிரூபன பிராமண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. முதல் தவணைத் தொகையை எதிரிக்கு எந்த தேதியில் எந்த வருடத்தில் கொடுத்தேனா என்றால் டிசம்பர் 2017 ம் கொடுத்தேன் தேதி ஞாபகமில்லை.

6) முதல் தவணைத் தொகையை எதிரி கேட்ட அன்றே நான் கொடுத்தேனா என்றால் என்னிடம் கேட்டு 2 வாரம் கழித்து தான் தொகையை கொடுத்தேன். என்ன ரூபாய் நோட்டுகளாக எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. அந்த கடன் தொகையை வங்கியிலிருந்து எடுத்து கொடுத்தேனா அல்லது வீட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொடுத்தேனா என்றால் என் அப்பா வியாபரத்திற்கு வைத்திருந்த பணத்தையும் என் கணவர் கப்பலில் வேலை செய்து அனுப்பிய பணத்தையும் வீட்டில் வைத்திருந்தேன். அதைத் தான் எதிரிக்கு கொடுத்தேன்.

7) மேற்படி சங்கதியை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு சொந்தவீடு எங்குள்ளது என்றால் சொந்தவீடு கிடையாது. நான் எதிரிக்கு கடன் கொடுத்த சமயத்தில் எனது வங்கிக்கணக்கில் எவ்வளவு சேமிப்பு தொகை இருந்தது என்றால் ஞாபகமில்லை. எனக்கு எத்தனை வங்கிக்கணக்கு உள்ளது என்றால் 2 வங்கி கணக்கு உள்ளது.

8) அந்த வங்கி கணக்குகள் எந்தெந்த ஊரில் உள்ளது என்றால் காளையார்கோவிலில் உள்ளது. எதிரிக்கு பணம் கொடுத்ததற்கு நீதிமன்றத்தில்

வேறு எதுவும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு பணம் கொடுத்ததற்கு ஏதேனும் வரவு செலவு குறித்து வைத்திருக்கிறேனா என்றால் இல்லை.

9) பொதுவாக கடன் கொடுக்கும் போது அந்த நபரிடமிருந்து புரோ நோட்டு கடன் பத்திரத்தில் கையொப்பம் பெறுவது வழக்கம் என்றால் ஆமாம். அது போல் கையொப்பம் எதுவும் பெற்றுள்ளேனா என்றால் அந்த மாதத்திலேயே பணத்தை திருப்பி தருவதாக சொன்னதால் எந்த கையொப்பமும் நான் பெறவில்லை. எதிரிக்கு கடன் தொகையை வட்டிக்கு கொடுத்தேனா என்றால் இல்லை.

10) பொதுவாக அதிகப்படியான தொகையை வட்டி மற்றும் எவ்வித முறையான ஆவணங்களும் இன்றி ஒரு நபருக்கு வழங்கமாட்டார்கள் என்றால் வங்கியில் கடன் கேட்டிருப்பதாகவும் அது விரைவில் கிடைக்கப்போவதாகவும் சொல்லிதான் எதிரி என்னிடம் கடன் கேட்டார் நம்பிக்கையின் அடிப்படையில் அவருக்கு பணம் கொடுத்தேன்.

11) எதிரியிடம் எந்த தேதியில் நான் காசோலை வாங்கினேன் என்றால் 20.03.2018 ம் தேதி. எத்தனை காசோலை வாங்கினேன் என்றால் எதிரி 12 காசோலை கொடுத்தார். எந்தெந்த வங்கியின் காசோலையை எதிரி என்னிடம் கொடுத்தார் என்றால் IOB மற்றும் Indian Bank காசோலையை என்னிடம் கொடுத்தார்.

12) Indian bank காசோலை யார் பெயருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சகாயம் கேஸ் ஏஜென்சி மேலாளர் என்ற அடிப்படையில் எதிரி கையொப்பமிட்டு எனக்கு காசோலை கொடுத்தார். அந்த நிறுவனத்தில் எத்தனை மேலாளர்கள் இருக்கிறார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பை நான் சகாயம் கேஸ் ஏஜென்சிக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. புகாரில் சகாயம் கேஸ் ஏஜென்சி மேலாளர் யை இந்த வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 12.12.2023**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**